திருமிகு **க.பார்த்திபன்** அவர்களுக்கு



சேலத்து மண்ணில் பிறந்த;
சீர்மிகு அன்பின் கேள்வன்,
சீலமாய்ச் சுங்கத் துறையின்
செவ்வியப் பணியில் சேர்ந்து,
கோலமாய் முப்பத்தி எட்டு
ஆண்டுகள் நிறைவு செய்து,
பாலமாய் பலரின் நட்பை,
பாங்குடன் பெற்றுக் கொண்டார்!

காலத்தின் வளர்ச்சி சொன்ன,
கனிவுசீர்ப் பணிஓய்வு இன்று!
ஆலமாய் நிறைந்த வாழிவின்,
அணியென இரண்டு மக்கள்!
சீலம்கொள் மகேந்திரனுடன்
சின்னவன் பிரபு வாக!
மூலமாய் நிறைந்தப் பணியகம்,
முடிவிலா நட்பைக் கூறும்!

பாலமாய் நின்ற தங்கே;
பெருமைகொள் குடியிருப்பு!
சீலமாய்க் கழித்தோம் அங்கு
சிலபல ஆண்டுதானே!
கோலமாய் நின்ற நினைவைக்
கோத்திட வைத்தது தமிழே!
சேலத்து மகனாம் பார்த்திபன்,
சீரோடு மகிழ்ந்து வாழ்க!



அன்புடன்,
கு.ப. அசோகன்,
**29-02-2020**